# 5.7 அன்பின் நற்செயல்கள்

**வேத வசனம்:** ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். எபேசியர் 2:10

## பாடக்குறிப்புகள்

* **சுயத்துடனும் சோம்பலுடனும் இராதே** - *மத். 25:26-30*
* **விசுவாசமும் விடாமுயற்சியும் கொண்டிரு** - *மத்.25:20-23*
* **மற்றவர்களுடன் ஒப்பிடாதே** - *யோவான் 21:21-22*
* **தேவன் நம்முடைய எல்லாக் கிரியைகளையும் நியாயம் தீர்ப்பார்** - *யாக். 2:17, ரோமர் 2:9-10*

**சத்தியம்:** தேவன் தம்மை நேசிப்பவர்களுக்கு மிகப்பெரியத் திட்டத்தை வைத்திருக்கிறார். ஆதலால் நாம் தேவனையும் அவருடைய அதிசயமான சித்தத்தையும் நேசித்து அவருக்கு நல்ல விசுவாசமான ஊழியக்காரர்களாக வேண்டும்.

**அறிக்கை:**
**நீ தன்னலத்துடனும் தளர்ந்தும் இராமல் தேவனுடைய நம்பிக்கைக்குரிய வேலைக்காரனாய் இரு.**

**வேதப்பகுதி**
*மத்தேயு 25:14-30*

## ஆர்வமூட்டும் வினாக்கள் (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- நீ ஒரு கடின உழைப்பாளி என எண்ணுகிறாயா?
- கிரியை இல்லாத விசுவாசம் செத்தது - இதில் நீ புரிந்து கொண்டது என்ன?
- நீடித்து நிற்கும் பணியாக நீ எதைக் கருதுகிறாய்? *(1 கொரி.3:12-15)*

## சிறந்தது மட்டும்

தேவன் நமக்கு மிகவும் சிறந்ததைக் கொடுக்க விரும்புகிறார். அது என்னவென்று அவர் மட்டும் அறிந்திருக்கிறார். நாம் ஓயாது மற்றவர்களுடன் நம்மை ஒப்பிட்டுக் கொண்டும் நமது ஆற்றலை மற்றவர்களை நியாயம் தீர்ப்பதில் செலவழித்தும் இருப்போமானால் நாம் தேவ சித்தத்திற்கும் அவர் திட்டத்திற்கும் நம் வாழ்வை ஒப்புக்கொடுக்காமல் இருக்கிறோம் என்றே அர்த்தம். உனக்காக அவர் வைத்திருக்கும் திட்டத்தைத் தேடு. அவர் உன்னிடத்தில் அன்பு கூர்ந்தது போல நீயும் பிறரிடத்தில் அன்பு கூற வேண்டும். இவ்வாறு செய்வாயானால் அவர் உனக்கென்று சேமித்து வைத்திருப்பதில் மிகச் சிறந்ததை அடைவாய்.

### செயல்

**தேவன் அன்பாய் இருக்கிறார். அந்த அன்பை நாம் பிறரிடத்தில் வெளிப்படுத்தும்படி தேவன் நம்மை அழைக்கிறார். அவ்வன்பையும் இரக்கத்தையும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குக் காண்பிக்கும் வழிகளை ஆராய்க.**

### சிந்திக்க:

மற்றவர்களை நியாயம் தீர்ப்பது தேவச் சித்தத்திற்கு எவ்வாறு மாறுபாடாக உள்ளது?

______________________________

______________________________

### ஜெபம்:

உன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு அன்பின் கிரியைகளை வெளிப்படுத்துவதற்கான வழியைத் தேவன் உனக்குக் காட்ட வேண்டி நீ ஏறெடுக்கும் ஜெபத்தை எழுது.

______________________________

______________________________